# உதயன்

விலை ரூபா 6.00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 18 வெள்ளிக்கிழமை (04-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 230


# பொன்னாலைப் பாலத்தை மீண்டும் போக்குவரத்துக்கு திறக்க ஏற்பாடு!

## பேச்சுவார்த்தை நடைபெறுவதாக அரசின் உயர் அதிகாரி நேற்று தகவல்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 4

காரைநகரில் மீளக் குடியேறுபவர்கள் தமது போக்குவரத்தை பொன்னாலைப் பாலம் ஊடாக மேற்கொள்ள வசதியாக, அப்பாலத்தைத் திறப்பது குறித்து பாதுகாப்புத் துறையினருடன் பேச்சுக்கள் நடத்தி வருவதாக வடபகுதியில் புனர்வாழ்வுப் பணிகளை மேற்பார்வை செய்வதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட வடக்கு மீள் குடியேற்ற அதிகார சபைத் தலைவர் சோமபால குணதீர உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக யாழ்ப்பாணம் வந்த சோமபாலகுணதீர நேற்றுக் கொழும்பு திரும்பினார்.

அவருடன் யாழ் அரச அதிபர் செ. பத்மநாதனும் கொழும்பு சென்றுள்ளார்.

காரைநகரில் மீளக்குடியேற விரும்புபவர்களில் 300 பேரை

(8 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் ஒரே சமயத்தில் இரு இடங்களில் தாக்குதல்

கொழும்பு, ஒக். 4

நேற்று முன்தினம் இரவு மன்னாரில் உள்ள 'ரெலிகொம்' நிறுவனத்தின் தொலைத் தொடர்பு கோபுரம் மீதும்—

மின்சார நிலையம்மீதும் விடுதலைப் புலிகள் ஒரே சமயத்தில் தாக்குதல் நடத்தினர்.

இத் தாக்குதலின் போதும் பின்னர் படையினருடன் இடம் பெற்ற மோதல்களின் போதும் இரு பொலீஸாரும் நான்கு படையினரும் ஒரு விடுதலைப் புலிகள் உறுப்பினரும் உயிரிழந்ததாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

'ரெலிகொம்' நிறுவனக் கட்டடம் மீதான தாக்குதலின் போதே 2 பொலீஸார் கொல்லப்பட்டனர். ஒரு பொலீஸாரும் இரு ரெலிகொம் நிறுவன ஊழியர்களும் காயமடைந்தனர். 'ரெலிகொம்' தொலைத் தொடர்புக் கோபுரம் தகர்க்கப்பட்டது.

மின்சார நிலையம் மீதான தாக்குதலின் போது அங்கு காவலில் இருந்த படையினரில் இருவர் உயிரிழந்தனர்.

இத் தாக்குதலின் பின்னர் படையினருக்கும் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட மோதல்களில் மற்றும் இரு படையினர் கொல்லப்பட்டனர்.

இந்தச் சம்பவத்திலேயே புலிகள் உறுப்பினர் ஒருவரும் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இத் தாக்குதல்களின் போது காயமடைந்தவர்கள் அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-103)

### அம்பாறையிலும் தாக்குதல்

கொழும்பு, ஒக் 4

அம்பாறை மாவட்டத்தில் நேற்று புலிகள் நடத்திய தாக்குதலில் இரு றிசேர்வ் பொலீஸாரும் ஓர் ஊர்காவலரும் சிவிலியன் ஒருவரும் கொல்லப்பட்டதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனம் தெரிவித்தது.

அம்பாறை மாவட்டத்தில் சென்ரல் முகாமில் 10 ஆவது கொலனியில் உள்ள பொலீஸ் நிலையமே புலிகளின் தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்பட்டது— (இ-3)

## மருதமுனை கொலைகளை கண்டித்து மட்டக்களப்பில் நேற்று ஹர்த்தால்!

மட்டக்களப்பு, ஒக். 4

கடந்த வாரம் அம்பாறை மாவட்டம் மருதமுனைப் பகுதியில் ஒன்பது தமிழ் மக்கள் கொல்லப்பட்டதை ஆட்சேபித்து நேற்று மட்டக்களப்பு நகரில் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது

மட்டக்களப்பு மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் நடந்த இந்தஹர்த்தாலையொட்டி கடைகள் மூடப்பட்டிருந்தன. சந்தைகள் வெறிச்சோடிக் கிடந்தன. போக்குவரத்து நடைபெறவில்லை.

வங்கிகளிலும், அரச அலுவலகங்களிலும் வேலை நடைபெறவில்லை.

நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகள் ஒத்திப்போடப்பட்டன.

மட்டக்களப்பு நகரில் உள்ள முஸ்லிம் கடைகளும் மூடப்பட்டிருந்தன.

கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டன.

இந்தப்பகுதியில் உள்ள மக்களின் உணர்வுகளுக்காககுரல் எழுப்பும் தலைவர்கள் இலங்கையில் இல்லாததால் உள்ளூர் மக்களே தமிழ் மக்களுக்காக குரல் எழுப்பவேண்டும் என்று மாணவர்சங்கம்விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

### மன்னாரில் புலிகளின் படகு சேதம் எனத் தெரிவிப்பு

மன்னாரில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் புலிகளின் படகு ஒன்றைத் தாக்கிச்சேதமாக்கியதாக இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

கல்லாறில் இருந்து ஆறு மைல்கள் மேற்கே நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## கிளிநொச்சியில் கைதான நால்வர் இங்கு விடுதலை

கிளிநொச்சியில் படையினரிடம் சிக்கிய நால்வர் நேற்று யாழ்ப்பாணத்தில் விடுதலை செய்யப்பட்டனர்.

கிளிநொச்சி, ஜெயந்தி நகரில் உள்ள தமது வீட்டில் பொருள்களை எடுப்பதற்காக சென்ற தம்பிராசா கருணாநிதி, தம்பிராசா கருணாமூர்த்தி ஆகியோரும் —

ஆனந்தபுரத்தில் தனது வீட்டில் இருந்த க. கனகசுந்தரம் என்பவரும் —

காது கேட்காத வயோதிபரான பொன்ன செல்லம் என்பவருமே படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவர்கள் நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்து விடுதலை செய்யப்பட்டு செயலக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர். (இ-3)

## சந்திரிகாவைக் கொல்ல திட்டமிட்டனராம்!

### நுவரெலியாவில் 6பேர் கைது

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவைக் கொலை செய்யத் திட்டமிட்டனர் என்று கூறப்படும் ஆறு பேர் நுவரெலியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று கொழும்புப்பத்திரிகைச்செய்தி ஒன்று தெரிவிக்கிறது

நுவரெலியாவில் ஜனாதிபதி வழமையாகப் பாவிக்கும் கார் மற்றும் முக்கிய இடங்களை இவர்கள் படம் எடுத்துள்ளனர் என்றும்—

இவர்களில் ஒருவர் ஆசிரியர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களை நுவரெலியா பொலீஸ் இணைப்புப் பிரிவினரே கைது செய்தனர். (இ-3)

## இடம் பெயர்ந்த ஆசிரியர்: யாழ். திரும்பக் கோரிக்கை

யாழ்ப்பாணத்தில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு இடம்பெயர்ந்த சகல ஆசிரியர்களையும் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்புமாறு கல்வி அமைச்சு கடிதம் அனுப்பி உள்ளது.

இந்த மாதச் சம்பளம் இடம்பெயர்ந்த மாவட்டத்தில் பெற முடியாது என்றும் அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம்—

குடாநாட்டில் இருந்து இடம்பெயர்ந்த அரச ஊழியர்களை உடன்யாழ்ப்பாணம் திரும்புமாறு கடந்த வாரம் பொது நிர்வாக அமைச்சு கோரியிருந்தது தெரிந்ததே. (இ-3)

## கிளிநொச்சியில் படையினர் தம் நிலைகளை பலப்படுத்திவருகின்றனர்

கொழும்பு,ஒக். 4

கிளிநொச்சியில் தாம் கைப்பற்றிய பகுதிகளில் தமது நிலைகளைப் பலப்படுத்தும் பணியில் ''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையில் படையினர் தொடர்ந்து ஈடுபட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

படையினர் பாதுகாப்பு முன்னணி அரண்களை ஏற்படுத்துவதில் ஈடுபட்டுள்ளனர் என்றும்—

புலிகள் விட்டு, விட்டு மோட்டார் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்றும்—

பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் அறிவித்துள்ளது

இத் தாக்குதல்களின் போது படையினருக்கு இழப்பு ஏற்படவில்லை என்றும் அது தெரிவித்தது. (இ-3)

### மற்றுமொரு முன்னாள் அமைச்சர் கைது

சென்னை, ஒக். 4

தமிழக முன்னாள் அமைச்சர் செங்கோட்டையன் ஈரோடில் நேற்று பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

போக்குவரத்து அமைச்சராக இருந்த சமயம், அரச வாகனங்களுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்ததில் இடம் பெற்ற ஊழல் தொடர்பாக இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (இ-3)

### மீனவர் கடத்தல்

புத்தளம் மாவட்டத்தில் உள்ள சிலாவத்துறையில் இனந் தெரியாதோர் 13 மீனவர்களையும் 7 படகுகளையும் கடத்திச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் மீனவர்கள் விடுவிக்கப்பட்டு விட்டனர்.

# பிரதம லிகிதர் பதவி வெற்றிடம்

எமது சங்கத்துக்கு ஒப்பந்த அடிப்படையில் கடமை யாற்றக் கூடிய ஒரு பிரதம லிகிதர் தேவை.

பின்வரும் தகைமை உடைய விண்ணப்பதாரிகள் 09-10-96 ஆம் திகதிக்கு முன் தங்கள் விண்ணப்பத் துடன் நேரில் சமுகம் கொடுக்கவும்.

1. 01-10-96 ஆம் திகதியில் 60 வயதிற்கு மேற் படாதவராகவும்,
2. சங்க அலுவல்களின் நிமித்தம் கொழும்புக்குச் சென்று வரக் கூடியவராகவும்,
3. ஆங்கிலத்தில் போதிய அறிவு உடையவராகவும்,
4. அரசாங்க/ கூட்டுத்தாபனங்களில் கடமையாற்றிய அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.
5. கூட்டுறவுத்துறை சார்ந்த அனுபவம் உடையவர்கள் விரும்பப்படுவர்.

தலைவர்
(சு. சிவபாலன், பிரதம கணக்காளர், செயலகம், யாழ்ப்பாணம்.)

யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
கலாசாலை வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
கோப்பாய். (சி/3224)

# ஓராண்டு நினைவஞ்சலி



## சிவபாதம் கணேஷ் (கரன்)

(பா/ சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவன்)

அன்னை மடியில்: 09 – 06 – 1981
ஆண்டவன் அடியில்: 16 – 10 – 1995

திதி: 04 – 10 – 1996

கணேஷா என்றழைக்க காணவில்லை உன்னையடா, காலன் உனைக் கவர்ந்தனனோ கதறுதடா எம்முள்ளம், ஆண்டவன் அழைத்து ஓராண்டு ஆயினவோ ஆறவில்லை எம்மிதயம். ஆசைமகன் உனைப் பிரிந்து. மனம் குமுறுதடா தம்பி! உன் புன்னகை தோன்றுகையிலே சிந்தை சிதறுதண்ணா! எம் சிந்தனை உன்னிடமே. காலங்கள் கரைந்திடலாம் - எம் கனவுகளும் கரைந்திடலாம், ஆனால் சரனே நின் நினைவுகள் என்றென்றும் தொடருமடா.

இவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்:

பெற்றோர், சகோதரர்கள்,
உற்றார், உறவினர்,
பேரன், பேர்த்தி.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம். (42966)

## கொழும்பு செல்லும் நோயாளருக்கு

யாழ்ப்பாணம், ஒக். 4

மேலதிக சிகிச்சை பெறுவதற்கு கொழும்பு செல்வதற்காக வைத்தியநிபுணர்களால் சிபார்சு செய்யப்பட்டு யாழ். வைத்தியசாலைப் பணிப்பாளரிடம் பதிவு செய்த நோயாளர்கள் தங்கள் பயணத்தை உறுதிப்படுத்துவதற்காக உடனடியாகவே பணிப்பாளர் பணிமனைக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (இ-15)

## விவியன் காலமானார்

கொழும்பு, ஒக். 4

சிரேஷ்ட அரசியல் வாதியும் லங்கா சமசமாஜக் கட்சியின் நீண்டகால உறுப்பினருமான திருமதி விவியன் குணவர்த்தனா நேற்றுக் காலை காலமானார்.

அவர் அண்மையில் தமது 80 ஆவது பிறந்த தினத்தைக் கொண்டாடியிருந்தார்.

முன்னாள் அமைச்சரும் சமசமாஜக் கட்சியின் முக்கிய உறுப்பினர்களில் ஒருவருமான காலஞ்சென்ற லெஸ்லி குணவர்த்தனாவின் மனைவியான அவர் 1950 ஆம் ஆண்டு கொழும்பு மாநகர சபைத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டியதன் மூலம் அரசியலில் பிரவேசித்தார். (இ-3)

## வேலணைகடலில் ஒதுங்கிய சடலம்

யாழ்ப்பாணம், ஒக். 4

வேலணைக் கடற்கரையில் கரை ஒதுங்கியதாக இனந் தெரியாத ஒருவரின் சடலம் நேற்று, ஊர்காவற்றுறை பொலீஸாரால், யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலம் ஊதிப்பருத்து அடையாளம் காண முடியாத நிலையில் துர்நாற்றம் வீசியபடி இருந்தது.

இச் சடலத்தை அரச செலவில் அடக்கம் செய்வதற்கான ஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டன. (இ-15)

## SPOKEN ENGLISH by BRITTO

ஆரம்பம்: 05-10-1996
நேரம்: பி.ப. 4-30 மணி
Personal Class
ஜோண் பொஸ்கோ முன்பாக
(றக்கா வீதி)
(43005)

பவுஸர் இல்லாததால்

## மண்எண்ணெய் இறக்குவதில் தாமதம்

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ்ப்பாணத்திலுள்ள பெற்றோலியம் கூட்டுத்தாபனத்துக்கென கப்பலில் ஒரு தொகுதி மண்எண்ணெய் எடுத்து வரப்பட்ட போதிலும் அவற்றை இறக்குவதற்கு யாழ். பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் தேவையான பவுஸர்கள் இல்லை.

இதனால் மண்எண்ணெயுடன் மேற்படி கப்பல் காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வெளியே பல நாள்களாகக் காத்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-4)

வெளிவந்துவிட்டது!

A/L வகுப்புப் புதிய பாடத்திட்டத்துக்குரிய

## உரைநடைக் கோவை

(ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் தொடக்கம் ஏ. என். சிவராமன் வரையுள்ள பதினைவரின் கட்டுரைத் தொகுப்பு)

1997 ஆம் ஆண்டு முதல் நடைபெறும் தேர்வுக்குரியது.

ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை
யாழ்ப்பாணம். (42998)

## YARL HALL கல்வி நிலையம்

93, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

A/L பரீட்சை எழுதிய மாணவர்களின் நன்மை கருதி

**சிங்கள வகுப்பு**

புதிய பிரிவு ஆரம்பம்: 6 – 10 – 96 ஞாயிறு 12-00 மணி

திரு. T. சகாதேவன் B. A. (Lond.)

O/L 1996 மாணவர்களுக்கான

**வினா - விடை வகுப்பு**

ஆரம்பம்: 6 - 10 - 96 ஞாயிறு 4-00 மணி
விஞ்ஞானம்: இரா. செல்வவடிவேல்
(42997)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்

**செல்லையா சுப்பையா**

(சுருட்டு வர்த்தகர் ஏழாலை வடக்கு, ஊரங்குணை)

இன்று (4-10-96) வெள்ளிக்கிழமை நிகழும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், 06-10-96 ஞாயிற்றுக்கிழமை நிகழவிருக்கும் வீட்டுக் கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

சு. சரஸ்வதி
(மனைவி)

தொல்புரம் கிழக்கு,
சுழிபுரம். (42955)

# தெம்மாங்கு பாடும் தென்மராட்சியில்

## தனது உதயத்தின் ஓராண்டு நிறைவை

உவகையுடன் கொண்டாடுகிறது

# மகாநதி புடவையகம்

- ★ திருமண பட்டுப் புடவைகள்.
- ★ மங்கையர் மனங்கவர் ஜவுளிகள், அதற்கேற்ற ரவிக்கைத் துணிகள்
- ★ கன்னிப் பெண்களின் கண்கவர் ஸ்கேட் அன் பிளவுஸ், கவுண் வகைகள்.
- ★ காளையருக்கேற்ற சேட்டிங், சூட்டிங், T சேட் றெடிமேற் ஜீன்ஸ், சேட் வகைகள்.
- ★ கண்மணிகளின் அழகை அழகுபடுத்தும் இம்போட்டன் கவுண் வகைகள்
- ★ சிறுவர்களுக்கேற்ற றெடிமேற் சூட், ஜீன்ஸ்

அனைத்தையும் ஒரே இடத்தில் என்றும் தரம் குன்றாமல் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஒரே ஸ்தாபனம்.

★ மகாநதி புடவையகம் ★

இல. 04, நவீன சந்தை, சாவகச்சேரி.
(42996)

# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்: 27—12—1920
ஆண்டவன் அடியில்: 30—10—1995

அமரர்

**பொன்னம்பலம் பொன்னுத்துரை**

(உரிமையாளர், ஸ்ரீமுருகன்ஸ்ரோர்ஸ், டெனியாய.)

திதி: 04—10—1996

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மைப் பண்போடும் அறிவோடும் பாசத்தோடும் வழி நடத்திய எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள் சகோதரர்கள்.

வளாக வீதி,
திருநெல்வேலி தெற்கு.
யாழ்ப்பாணம். (43002)

# காஷ்மீர் முதல்வராக பாருக் அப்துல்லா!

## செவ்வாயன்று பதவி ஏற்பார்

காஷ்மீர் மாநில முதல்வராக எதிர்வரும் செவ்வாய்க்கிழமை காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் பாருக் அப்துல்லா பதவியேற்கவுள்ளார்.

மாநிலத் தேர்தலில் இவரது கட்சி அறுதிப் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு பாருக் அப்துல்லாவுடன் ஒத்துழைத்து காஷ்மீர் மாநிலத்திற்கு வாக்குறுதி அளிக்கப்பட்டபடி சுயாட்சி அந்தஸ்தை வழங்குமேயானால் ஆயுதம் ஏந்திய போராட்டம் தானாக ஒய்ந்துவிடும் என அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காஷ்மீர் சட்டசபைத் தேர்தல் நான்கு கட்டங்களாக நடைபெற்றது தெரிந்ததே.

பெரும்பாலான முஸ்லிம் தீவிரவாதக் கட்சிகள் இந்தத் தேர்தலை பகிஷ்கரித்திருந்தன. (இ-10)

## நோபல் பரிசு யாருக்கு?

ஒஸ்லோ, ஒக். 4

இந்த ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசை யாருக்கு வழங்கலாம் என்பதை விவாதிக்க நேற்று முன்தினம் நோபல் பரிசுக்குழு நோர்வேயிலுள்ள ஒஸ்லோ நகரில் கூடியது. உலகெங்குமிருந்து 120 பேரின் பெயர்கள் இந்தப் பெருமைமிகு பரிசுக்கு பரிசீலிக்கப்பட்டுவருகிறது.

பொஸ்னியாவில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட உழைத்த அமெரிக்கப் பேச்சுவார்த்தையாளர் றிச்சாட் ஹெல்புறூக் அவர்களுக்கு இவ்வாண்டு அமைதிக்கான நோபல் பரிசு கிடைக்க அதிக வாய்ப்புக்கள் உள்ளன என பத்திரிகைகள் தெரிவிக்கின்றன. (இ-10)

## தென் மாநிலங்களில் புயல்

தென் இந்தியாவிலுள்ள ஆந்திரப்பிரதேசம், கர்நாடக மாநிலங்களை நேற்று முன்தினம் தாக்கிய கடும்புயலுக்கு 22 பேர் பலியாகினர்.

மணிக்கு 120 மைல் வேகத்தில் வீசிய இந்தப்புயல் காரணமாக வீடு ஒன்று இடிந்து விழுந்ததில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலியானார்கள். (இ-10)

## கௌரவ குடியுரிமை பெறும் முதலாவது பெண்

வாஷிங்டன், ஒக் 4

''நீதியும் நன்மைகளும் நிறைந்த ஒரு சமுதாயம் குறித்த கனவுகளை நனவாக்குவதற்கு எடுத்துக் காட்டாக அன்னை திரேசா விளங்குகிறார்'' என அன்னை திரேசாவுக்கு கௌரவ குடியுரிமையை வழங்குவதற்கான நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமெரிக்க அதிபர் பில் கிளிங்டன் தெரிவித்தார்.

அன்னை திரேசாவுக்கு அமெரிக்க கௌரவக் குடியுரிமை வழங்கும் ஆவணங்களில் அதிபர் கிளிங்டன் கைச்சாத்திட்டுள்ளார்.

அமெரிக்காவில் கௌரவ குடியுரிமை பெறும் நாலாவது நபர் அன்னை திரேசா ஆவார் (இ-10)

## சுக்ராமின் காவல் நீடிப்பு

புதுடில்லி, ஒக். 24

வருமானத்துக்கு மேலாக சொத்துக்களைச் சேர்த்தது தொடர்பாக கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலில் இருக்கும் முன்னாள் இந்திய தகவல் தொடர்பு அமைச்சர் சுக்ராமின் காவல் இம்மாதம் 12 ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

சுக்ராமை பிணையில் விடுவித்தால் அவர் சாட்சியங்களைக் கலைத்து புலனாய்வுகளுக்குப் பாதகம் ஏற்படுத்துவார் என சி. பி. ஐ தரப்பில் அச்சம் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே சுக்ராமின் காவலை நீடிக்கும் உத்தரவை நீதிபதி விடுத்தார். (இ-10)

## உலக அரங்கில்

### விமான விபத்து

பெருநாட்டுக்குச் சொந்தமான பேயிஸ் 747 விமானம் நேற்று முன்தினம் லிமாவிலிருந்து சிலி நாட்டிற்கு சென்றுகொண்டிருந்த போது இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் விழுந்து நொறுங்கியது. அந்த விமானத்தில் பயணம் செய்த 70 பேரும் பலியானார்கள். (இ-10

# குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்படும் பதவி இழந்த ஆட்சியாளர்கள்!

## தெற்கு, தென்கிழக்காசிய அரசியலில் இது சகஜமாகி வருகிறது

மக்களுக்கு உழைப்பில்லை. உண்ண உணவில்லை. கிடைக்கும் வருமானத்தில் 60 சதவீதத்தை அரசுக்கு வரியாகக் கட்ட வேண்டும். அரசன் வேர்செயில்ஸ் மாளிகையில் உல்லாச வாழ்க்கை.

பட்டினியால் வாடிய மக்கள் திரண்டு அரசனிடம் சென்றனர். ''அரசே நாங்கள் பசியால் வாடுகிறோம். எங்களுக்குப் பாண் கூடக் கிடைக்கவில்லை'' என முறையிட்டனர் ''பாண் இல்லை என்றால் கேக்கை வாங்கிச் சாப்பிடுங்கள்'' இது அரசனின் பதில். 16 ஆம் லூயி மன்னனும் அரசியும் வீதிக்கு இழுத்துவரப் பட்டனர். ''கிலற்றின்'' என்னும் பெரிய வாளினால் அவர்களது தலைகள் கொய்யப்பட்டன.


> மக்களின் நலனைப் பேணாத — மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றாத — ஆட்சித் தலைவர்கள் பலர் அதிகாரத்திலிருந்து தூக்கி எறியப்பட்டனர் தண்டனையும் பெற்றனர். இது வரலாறு. இதைப் பற்றிய கண்ணோட்டம் இங்கு பிரசுரமாகிறது.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளது, 1789 இல் பிரான்ஸ் நாட்டில் பிரான்சியப் புரட்சி ஏற்பட்டதைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களில் ஒன்றாகும். பிரான்ஸில் புரட்சி ஏற்பட்டதற்கு அரசியல், சமூக, பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக இருந்த போதிலும் மக்களின் தேவைகள், அபிலாஷைகள் புறக்கணிக்கப்பட்டதே புரட்சி வெடிப்பதற்கு உடனடிக் காரணமாக அமைந்தது.

ஜனநாயக வழிமுறைகள் மூலம், புரட்சிச் சதி மூலம், பரம்பரை ஆட்சிமுறை மூலம் அல்லது வேறு காரணங்களினால் ஒருவர் நாட்டின் தலைவனாக அல்லது தலைவியாக வரலாம். இவ்வாறு ஆட்சிக்கு வந்த பலர் தமது அரசியல் விரோதிகளை, இராணுவ விரோதிகளை, தனிப்பட்ட விரோதிகளை பழிவாங்கி வந்துள்ளனர்.

இவ்வாறு ஆட்சிக்கு வந்தவர்களில் பலர் ஆட்சிக்கு எந்த வழிமுறையில் வந்தார்களோ அதே வழிமுறைகள் மூலம் பெரும்பாலும் தோறகடிக்கப்பட்டுள்ளனர்; தண்டிக்கவும்பட்டுள்ளனர். இதற்கு ஓரிரு விதி விலக்குகள் இருப்பினும் இதுவே வரலாறு.

இதற்கு அண்மைக்கால உதாரணங்களாக தென் கொரியாவில் சன்டு வான் ஆப்கானிஸ்தானில் நஜிபுல்லா பங்களாதேஷில் ஏர்ஷாத் ஆகியோருக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனைகளையும், இந்திய அரசியல்வாதிகள் மீது, குறிப்பாக முன்னாள் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ், தமிழக முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆகியோர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச் சாட்டுகளையும் குறிப்பிடலாம்.



ஜனாதிபதி கிம் யங் சாம்

பதவிக் காலத்தில் அதிகாரத்தைத் துஷ்பிரயோகங்கள் செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டியவர்களே

தென் கொரியாவில்

1979 டிசம்பரில் சன்டு வான் இராணுவப் புரட்சி மூலம் தென் கொரியாவில் ஆட்சியைக் கைப்பற்றினார் அவரின் இராணுவ ஆட்சியை எதிர்த்து 1980 மே மாதம் குவாங்யு நகரில் மக்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். ஜனாதிபதி சன்டு வான் இராணுவத்தை அனுப்பிக் கிளர்ச்சியை நசுக்கினார். அப்போது 200 க்கும் அதிகமான குடிமக்கள் கொல்லப்பட்டனர். அச்சமயம் இராணுவத் தளபதியாக ரொடேவூ இருந்தார்.

### தொகுப்பு: கஜனி

1988 ஆம் ஆண்டில் ரொடேவூவிடம ஆட்சியை ஒப்படைத்து வீட்டு சன்டு வான் அரசியலில் இருந்து ஒதுங்கிக் கொண்டார்.

ஆட்சிக் காலத்தில் தான் செய்த அநியாயங்களுக்கு பரிகாரம் தேடும் முகமாக, கிராமம் ஒன்றில் உள்ள பௌத்த ஆலயம் ஒன்றில் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார்.

இதன் மூலம் தனது பாவங்கள் எல்லாம் கழுவப்பட்டு விட்டன என எண்ணிய சன்டு வான் துறவறத்தைத் துறந்து இல்லறத்தை நாடினார். ஆனால் அவர் போட்ட கணக்குத் தவறிவிட்டது.

1992 இல் ரொடேவூ ஜனாதிபதி பதவியில் இருந்து விலகிக் கொண்டார். இதையடுத்து எதிர்க்கட்சித் தலைவராக இருந்த கிம் யங் சாம் 1993இல் ஜனாதிபதியானார். இராணுவத்தைச் சேராத முதலாவது தென்கொரிய ஜனாதிபதி என்ற பெருமை கிம் யங் சாமுக்குக் கிட்டியது.

குவாங்யூ படுகொலையின் போது கிம் யங் சாமை, சன்டு வான் வீட்டுக் காவலில் வைத்திருந்தார். அவரது கட்சியும் அப்பொழுது தடைசெய்யப்பட்டிருந்தது.

கிம் யங் சாம் பதவிக்கு வந்ததும் ஜனாதிபதிபதவியில் இருந்தபோது இழைத்த குற்றச்சாட்டுகளுக்காக முன்னாள் ஜனாதிபதியான சன்டு வான் ரெடேவூ ஆகியோர் மீது நீதிமன்ற விசாரணைக்கு உத்தரவிட்டார்.

குவாங்யூ படுகொலையை நடத்தியதாக சன்டுவான் மீதும் அதற்கு உதவியதாக ரொடேவூ மீதும் குற்றம் சுமத்தப்பட்டது. பல கோடி ரூபா ஊழல் புரிந்ததாக ரொடேவூ மீது தனியான வேறு ஒரு குற்றமும் சுமத்தப்பட்டது.

இந்தவழக்கின் விசாரணைகள் கடந்த ஆகஸ்டில் முடிந்தன. நீதிமன்றம் இரு முன்னாள் ஜனாதிபதிகளையும் எதிரிகளாகக் கண்டு தீர்ப்பு வழங்கியுள்ளது.

சன்டுவானுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. ரொடேவுக்கு 22½ ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப் பட்டுள்ளது.

ரொடேவூவுக்கு வழங்கப்பட்டுள்ள தண்டனை அவர் செய்த குற்றங்களுக்கு போதுமானதாக இல்லை என அரசு தரப்பு வழக்கறிஞர்கள் மேன் முறையீடு செய்துள்ளனர்.



ஸியோல் நீதிமன்றத்தில் தீர்ப்பை எதிர்பார்த்து சிறை உடையுடன் எழுந்து நிற்கும் முன்னாள் ஜனாதிபதிகள் ரொடேவூ (வலது), சன்டு வான் (இடது).

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட இத் தண்டனைகள், இராணுவச் சதிப் புரட்சி, படுகொலைகளுக்குப் பேர்போன ஆசிய நாடுகள் சிலவற்றில் எதி

(8 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தை மேசையா? யுத்த களமா?

# அரசு முடிவு செய்ய வேண்டிய கட்டம் இது!

## விடுதலைப்புலிகளுக்கும் அரசுக்குமிடையே தொடர்பு வழி உருவாக்கப்பட வேண்டும்

சமீபத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ''புரொண்ட்லைன்'' சஞ்சிகைக்கு பேட்டியளித்திருக்கின்றார்.

இனப்பிரச்சினையை சர்வதேசமயப்படுத்த ஸ்ரீலங்கா என்றும் விரும்பியதில்லை. தொடர்ந்து ஆட்சிக்கு வந்த அரசுகள் இந்த விவகாரம் உள்நாட்டுப் போராட்டம் என்றே கருதி வந்திருக்கின்றன.

மத்தியஸ்தர் என்ற பாக மேற்று இந்தப் பிரச்சினையில் இந்தியா தலையிடும் என்ற கருத்தையே சரித்திரம் எமக்குக் காட்டியுள்ளது. ஆனால் இன்றைய காலகட்டத்தில் ஸ்ரீலங்காவின் இனப்

> விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனை நேரில் சந்தித்து உரையாடிய —தென்னிலங்கையைச் சேர்ந்த— ஒரேயொரு அரசியல்வாதி முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஏ.ஸி.எஸ். ஹமீத்.
>
> அவர் 'சண்டே லீடர்' பத்திரிகைக்கு அளித்த பேட்டியின் தொகுப்பு இது.

பிரச்சினை விவகாரத்தில் இந்தியா முக்கிய பங்கேற்காது என்றே நினைக்கிறேன். ஆனால் இந்த விடயத்தில் தனக்கு எதுவும் தெரிவிக்காமல் தன்னை இருட்டில் வைத்திருக்கும் நிலையை இந்தியா விரும்பாது என்றும் கருதுகிறேன்.

ஸ்ரீலங்கா-இந்திய உறவுகள் இப்போது மிகவும் நெருக்கமாக உள்ளன. அதே சமயம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான மாயையான கருத்துக்கள் பரவியுள்ள போதிலும், தமிழகம் ஈழத் தமிழர்களை கைகழுவி விடப்போவதில்லை.

இலங்கை இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான விவகாரத்தில் ஏதேனும் வெளிநாட்டு அரசு மத்தியஸ்தராகச் செயற்படுவதாயின் அது நோர்வே அல்லது சுவீடன் அல்லது கனடாவாகவே இருக்க முடியும்.



ஹமீத்

ஆனால் ஜனாதிபதி குமாரதுங்கா உத்தியோக பூர்வமாக மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தைக் கோருவாரானால் அந்த மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் கட்டாயமாக ஒரு வெளிநாட்டு அரசாங்கமாக இருக்க வேண்டும் என்பது அவசியமல்ல.

### யுத்தம் டென்னிஸ் பந்து

யுத்தம் ஒரு டென்னிஸ் பந்து போன்றது. அதனை நீங்கள் பலமாக அடித்தால் அது பலமாகத் திரும்பித் துள்ளிப் பாயும்.

தற்போதைய அரசு, அரசியல்தீர்வுகாணும் விடயத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ள போதிலும் —

இது விடயத்தில் அரசுத் தரப்பு, பிரதான எதிர்க் கட்சி, தமிழ் அரசியல் கட்சிகள், முஸ்லிம் கட்சி ஆகிய நான்கு முக்கிய அரசியல் பிரிவுகளுடன் கடுமையாய்ப் போராட வேண்டிய இக்கட்டு நிலையும் அரசுக்கு உள்ளது.

தனது அதிகாரப் பகிர்வுத் திட்டத்திற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவை அரசினால் பெற்றுக் கொள்ள முடிந்தால் கூட, அது யுத்தம் முடிவடைந்து விட்டது என்ற அர்த்தத்தைத்தரப் போவதில்லை.

அதிகாரப் பகிர்வுத் திட்டத்தை நடைமுறைப் படுத்தும் விவகாரத்தில் விடுதலைப் புலிகளை அரசியல் மட்டத்தில் சேர்த்துக் கொள்வது மிக முக்கியமான அம்சமாக இருக்கப் போகின்றது.

கிளர்ச்சிக் குழுவுக்காக — விருப்பம் இல்லாவிடினும் — கதவை சிறிய அளவிலாவது திறந்து வைப்பது அவசியமாகுகின்றது.

### ஐ. தே. கவின் ஆதரவு

அதிகாரப் பகிர்வு தொடர்பாக அரசின் போக்கு, அதற்கு ஐ. தே கவின் ஆதரவைத் திரட்டும் பயனுள்ள முயற்சியில் போதிய ஈடுபாடு கொண்டதாக இல்லை.

அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்துவதை நாட்டில் சாதாரண சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே வெற்றிகரமாகச் செயற்படுத்த முடியும்

### தொடர்பு அவசியம்

அரசுக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையில் தொடர்பு வசதி ஒன்றைக்கட்டியெழுப்புவது எதிர்காலப் பேச்சுவார்த்தைக்கு உதவுவதாக அமையும். ஆனால் இதில் காலத்தைத் தீர்மானிப்பது அரசின் உரிமையாக இருக்க வேண்டும்.

சமாதானமுயற்சிகளில்தான் அக்கறையாக இருப்பதையும் —

ஸ்ரீலங்காவின் அரசியல் நிர்வாகம் தனது சட்ட முறைகளை நடைமுறைக்கு உரிய வகையில் மாற்றுவதில் உண்மையாக உள்ளதை சர்வதேச சமூகத்துக்கு நிரூபிப்பதையும்—

வெளிக்காட்ட வேண்டுமானால் கிளர்ச்சியாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தும் நடவடிக்கை அரசுக்கு அவசியமாகுகின்றது.



பிரபா

### இரண்டில் எது?

இனப்பிரச்சினைக்கு யுத்தக் களத்தில் முடிவு காண்பதா? அல்லது பேச்சுவார்த்தை மேசையில் தீர்வை எட்டுவதா? என்பது குறித்து — இந்தக் கட்டத்தில் — அரசு இரண்டிலொரு முடிவை எடுக்க வேண்டும்.

யுத்தக் களத்தில் முடிவு காண்பதாகத் தீர்மானித்தால் விடுதலைப்புலிகளை அடியோடு அழிக்கும் விரிவான இராணுவ மூலோபாயம் வகுக்கப்படவேண்டும்.

பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகான முடிவு செய்தால் கிளர்ச்சியாளர்களுடன் அரசியல் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு உகந்த சூழ்நிலையை ஏற்படுத்தக் கூடிய வகையில் அரசியல் சக்கரம் சுழல அனுமதிக்கப்பட வேண்டும்.

ஆனால் சமாதான முயற்சிகள் ஆரம்பமாவதற்கு உகந்த சூழ்நிலை உருவாக்கப்படுவது அவசியமாகுகின்றது.

விடுதலைப் புலிகள் தமது இறுதி நோக்கத்தில் நூறு வீதம் தீர்க்கமாக இருக்கின்றார்கள் என்பதே எனது கருத்து.

என்றாலும் உலகில் நடக்க முடியாதது என்று கருதப்பட்ட பிரச்சினைகள் கூட உரிய முறையில் அணுகப்பட்டதால் நடத்திக் காண்பிக்கப்பட்டிருப்பதை மறந்துவிட முடியாது.

### தேர்தல் மூலம் நிரூபிக்கட்டும்

மறைவில் இருக்கின்ற கிளர்ச்சித் தலைவரை உயர்ந்த இடத்தில் வைத்து பேணுகின்ற போக்கு உண்மையானதுதானா? என்பது தேர்தல் மூலம் நிரூபிக்கப்பட வேண்டும்; தங்களுடைய உண்மையான பிரதிநிதிகள் யார் என்பதை — சந்தேகத்தின் நிழல் கூடபடாத வகையில்— நிரூபிக்கத்தக்க விதத்தில் வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு ஒரு தேர்தல் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும்.

ஸ்ரீலங்காவில் உள்ள தமிழர்களின் பாதுகாவலன் தானே என்ற உறுதியான தோற்றம் ஒன்றை பிரபாகரன் தோற்றுவித்திருக்கின்றார்.

வடக்கு, கிழக்கு தமிழர்களின் வாக்குச் சீட்டுகளுக்கு முன்னால் தன்னை நிறுத்தி அவர் இதனை நிரூபித்துக் காட்டட்டும். அதுதான் இறுதிப் பரீட்சையாக இருக்கும்.

இந்த கிளர்ச்சித் தலைவர் இப்போது நேரில்தெரியாத ஆவியாகத்தான்காட்சிதருகின்றார்!

---

## அனைவருக்கும் உளநலம் - 04

### ஆளுமை - ஆரோக்கியத்தின் அடிப்படை

★ ஒருவரது தனித்துவமானதும், முழுமையானதுமான வெளிப்பாடே ஆளுமை.

★ இயற்கையான சுபாவம்; இயல்பான புத்தி சாதுரியம்; மனோநிலையும் செயலூக்கமும்— இவை ஆளுமையின் மூன்று பகுதிகள்.

★ நல்லதொரு ஆளுமைவளர்ச்சிக்கு ஆரோக்கியமான மாதிரிகள் உதவுகின்றன.

★ ஒருவர் தன் மீது தானே அன்பு செலுத்திக் கொள்ளல், தன்னைத் தான் ஏற்றுக் கொள்ளல், தன்னைத் தான் மேலாக மதித்துக் கொள்ளல், தன்னைத் தான் நயந்து கொள்ளல், அனைத்திற்கும் மேலாக தன்னையே தான் கொண்டாடுதல்—அவரது ஆளுமையின் அணிகலன்கள் ஆகும்.

★ தனி மனிதனின் தனித்துவத்தை அங்கீகரித்து, அவரது விருத்திக்கு உதவுவோமாக.

★ ஒருவரது ஆளுமை, அவருக்கு அல்லது சமூகத்திற்கு அல்லது இரண்டிற்குமே பிரச்சினையாக அமையும் போது, அது ''ஆளுமைக் கோளாறு'' ஆகிறது

---

## லயன்ஸ் ஆதரவில் மாணவருக்கு சிகிச்சை முகாம்

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் தும்பளை சிவப்பிரகாச வித்தியாலய மாணவர்களுக்கென சிகிச்சை முகாம் ஒன்று நடத்தப்பட்டது.

பருத்தித்துறை—மந்திகை அரசினர் ஆதார வைத்திய சாலை மாவட்ட வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் சி. சதிரைவேற்பிள்ளை பொது வைத்திய சிகிச்சைகளையும், பல்வைத்திய நிபுணர் டாக்டர் திருமதி கு. பத்மராணி பற்சிகிச்சைகளையும் மேற்கொண்டனர். [இ-173]

## நெடுந்தீவில் 2 பகுதிகளுக்கு மின்சாரம்

நெடுந்தீவு ஒக், 4

நெடுந்தீவு மின் நிலையம் எதிர்வரும் சனிக்கிழமை திறந்து வைக்கப்படுவதன் மூலம் பிரதான வீதியில் துறைமுகத்தில் இருந்து உதவி அரசாங்க அதிபர் பணிமனை வரையான பகுதியும்—

மத்தி பெருக்கடி பிள்ளையார் கோயில் வரையான பகுதியும்—

மின்னொளி பெறவுள்ளன.

தீவுப்பகுதிக்கான மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் மின் நிலையத்தை திறந்து வைப்பார். (இ111)

---

### நீர்கொழும்பு குழப்பம்:

## ரூ. 20 லட்சம் நஷ்டஈடுகோரி ஐ. தே. க. சார்பில் வழக்கு

ஐக்கிய தேசியக் கட்சியின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நீர்கொழும்புப் பிரதேசத்தில் நடைபெற ஏற்பாடாகியிருந்த நிகழ்வுகளுக்கு பாதுகாப்பு வழங்க மறுக்கப்பட்டதை ஆட்சேபித்து — அதற்கு நஷ்டஈடாக 20 லட்சம் ரூபா வழங்கக்கோரி உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டிருக்கின்றது.

இது தொடர்பாக நீர்கொழும்பு நகரபிதாவும், ஐக்கிய தேசியக் கட்சிப் பிரமுகருமான நிக்கிலஸ் பெர்னாண்டோ தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர் நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றது. (உ-10)

## பண்டா-செல்வா ஒப்பந்த முறிவின் விளைவே யுத்தம்

### விளக்குகின்றார் தொண்டா

கொழும்பு, ஒக். 4

''அன்று பண்டாரநாயக்கா செய்துகொண்ட பண்டா—செல்வா ஒப்பந்தம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தால் வடக்கு-கிழக்கில் இன்று இரத்த ஆறு ஓடக்கூடிய போராட்ட சூழ்நிலை ஏற்பட்டிருக்காது. அந்த ஒப்பந்தத்தின் தோல்வியே போராட்டவடிவத்தின் ஆரம்பமாக அமைந்தது.''

கிராமிய, கைத்தொழில், கால்நடை அபிவிருத்தி அமைச்சர் எஸ். தொண்டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெல்பொட பாரதி வித்தியாலயத்தில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார் (உ-3)

## சுகாதாரபகுதிக்கு ''பிக் அப்''

யாழ். பிராந்திய சுகாதாரத் திணைக்களத்தின் தேவைக்கென ''பிக் அப்'' வாகனம் ஒன்று வடக்கு-கிழக்கு மாகாணசபை சுகாதார அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாகனம் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்து வரப்படும்.

(இ-173)

# 'யானைப் பசிக்கு சோளப் பொரி' அளவிலேயே

# வன்னிப் பகுதிக்கு அரசு உணவு அனுப்புகிறதாம்

இராணுவக் கட்டுப்பாட்டில் இலலாத வன்னிப்பகுதிக்கு நாளாந்தம் எழுபது லொறிகளில் உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை வவுனியாவில் இருந்து அனுப்பி வைக்க வேண்டும் என்று அரசிடம் வடபகுதி அதிகாரிகள் கோரியிருக்கின்றனர்.

தற்போது மாரிகாலம் ஆரம்பமாகவிருக்கிறது.

கால நிலை சீர்கெட்டால் தொடர்ச்சியாக — தரை மார்க்கமாக — லொறிகளில் பொருள்களை ஏற்றி அனுப்ப முடியாது.

பல வருடங்களாக பராமரிக்கப்படாமல் இருக்கின்ற ஓமந்தைக்கு அப்பால் உள்ள — வீதிகளில் பாரமான வண்டிகளில் பொருள்களை ஏற்றிச் செல்வதும் கஷ்டமாக இருக்கும்.

வன்னிப் பகுதியில் உள்ள விவசாயிகள் காலபோக பயிர்ச் செய்கையில் ஈடுபட வேண்டியிருக்கிறது.

கடந்த வருடம் நிலவிய கடும் வரட்சியால் அவர்களின் விவசாய முயற்சிகள் எல்லாம் பாதிக்கப்பட்டு விட்டன.

எரிபொருள்கள், பசளைகள், இரசாயன மருந்து வகைகள், விவசாய உபகரணங்கள் போன்றவையும் அங்கு அவசரமாகத் தேவைப்படுகிறது.

கிளிநொச்சி யுத்தநிலைமை காரணமாக லட்சக் கணக்கான மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் பாதிக்கப்பட்டு அகதிகளாக இருக்கிறார்கள் தொழில்களையும் கிரமமான வருவாயையும் அவர்கள் இழந்துள்ளார்கள்.

வன்னிப் பகுதியில் உள்ள உணவுக் களஞ்சியங்கள் கூட வெறிச்சோடிக் கிடக்கின்றன.

இந்த நிலைமையில் ''யானைப் பசிக்கு சோளப் பொரி'' போட்டது போலத் தான் தற்போது நாளாந்தம் 50 லொறிகளில் வவுனியாவில் இருந்து பொருள்கள் அங்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

## நிவாரணம் இல்லை

முன்னைய ''உண்மை வெற்றி'' நடவடிக்கையின் போது, கிளிநொச்சி மாவட்டத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கும், ''சூரியப்பிரகாசம் — ii'' இராணுவ நடவடிக்கையின் போது யாழ். குடாநாட்டில் இருந்து கிளிநொச்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து வந்தவர்களுக்கும் இப்போது நிவாரண உதவிகள் வழங்கப்படுவதில்லை.

''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையின்போது இடம் பெயர்ந்தவர்களுக்கு முதலில் அவசர உதவியாக சமைத்த உணவும், பின்பு 2 வாரத்துக்குரிய நிவாரண உலர் உணவும் மட்டுமே வழங்கப்பட்டன.

தொடர்ந்தும் அவர்களுக்கு நிவாரண உணவு வழங்குவதற்குரிய அனுமதி கொழும்பில் இருந்து இன்னும் அதிகாரிகளுக்கு கிடைக்கவில்லை.

> இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்படுவது குறித்து பி. பி. ஸி. வெளியிட்ட தகவல்களின் தொகுப்பு இங்கு பிரசுரமாகிறது.

ஒருசில உதவி நிறுவனங்கள் மட்டும் வன்னியில் செயற்பட்டு வருகின்றன.

ஆனால் அந்நிறுவனங்களுக்கு நிவாரண உதவிகள் வழங்குவதற்கு தேவையான — மிக அவசியமாகத் தேவையான — உறைவிடம் அதாவது தங்குமிடம் அமைப்பதற்குரிய பொருள்களை எடுத்துச்செல்வதற்கான அனுமதி இன்னும் அரசாங்கத்திடம் இருந்து கிடைக்கவில்லை

அதனால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண நிறுவனங்கள் முழுமையான அளவில் உதவி செய்ய முடியாது இருக்கிறது.

''உண்மை வெற்றி'' இராணுவ நடவடிக்கையினால் இடம் பெயர்ந்தவர்களும் ''சூரியப் பிரகாசம் II'' நடவடிக்கையினால் பாதிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்களுமாக சுமார் இரண்டரை இலட்சம் மக்களுக்கு இன்னமும் நிவாரணப் பொருள்கள் வழங்கப் படவில்லை.

இதனால் இரண்டரை இலசத்துக்கு மேற்பட்ட மக்கள் மிக மோசமாகப் பாதிக்கப் பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது

போஷாக்கின்மையும், ஆரோக்கியச் சீர்கேடும் அவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளன.

உள்ளூர் பொது ஸ்தாபனங்கள் மற்றும் தொண்டர் நிறுவனங்களின் உதவினால் தான் அவர்கள் இப்போது உயிர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ✶

## நாணயங்கள் தேக்கம்

குடாநாட்டில் சில்லறை நாணயங்கள் பெருமளவில் தேங்கியுள்ளன.

50 சதம், ஒரு ரூபா, இரண்டு ரூபா, ஐந்து ரூபா, சில்லறை நாணயங்கள் வர்த்தக நிலையங்களில் பெருமளவில் தேங்கியுள்ளதால் அவற்றை தேவையான நோட்டுகளாக மாற்றிக் கொள்ள முடியாது வர்த்தகர்கள் தவிப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-173)


# அருள்மிகு ஸ்ரீ இலஞ்சியாரணியம் மண்டுவில் அம்மன் ஆலயம்

(சோலை அம்மன்)

சாவகச்சேரி.

எமது ஆலயத்திற்குரிய சித்திரத்தேரினது பழுதற்ற சக்கரங்களைப் புதிதாக நிர்மாணிப்பதற்கேற்ற மருதமரம் மரமாகவோ அல்லது அறுத்த துண்டங்களாகவோ தேவைப்படுகின்றது. வைத்திருப்போர் விலை விவரங்களுடன் தொடர்புகொள்க,

க. கிருபானந்தக் குருக்கள்,
பிரதம குரு.

(42991)



# யூனிவேர்சல்

கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

## புதிய பிரிவு O/L

மீட்டல் வகுப்பு

ஆரம்பம்:
05-10-96 சனி மாலை 3 00 மணி
ஆண்டு
10, 9, 8, 7, 6, 5 ஆம் வகுப்புகளும் நடைபெறுகின்றன.
அனுமதியை உறுதி செய்து கொள்ளவும்.

—நிர்வாகம்.

(42975)



உ
சிவமயம்

# திருமதி நகுலேஸ்வரி ஆறுமுகம்

அவர்களின்

## சிரார்த்த தின பிரார்த்தனை

இடம்; நல்லை ஆதீனம்
காலம்; 05 - 10 - 96 சனிக்கிழமை
காலை 9-00 திருக்கயிலைத் திருமுறை ஓதல்
காலை 11-0ப அபிஷேகம் பூசை
பகல் 12-00 அன்னம் பாலிப்பு

நல்லை ஆதீனம் குரு மகா சந்நிதானம் அவர்கள் தலைமையில் நடைபெறும் இந்த வைபவத்தில் உற்றார், உறவினர், அன்பர்கள் அனைவரையம் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டி நிற்கும்;

''நகுலஸ்தான்''
102, பலாலி வீதி,
கந்தமடம்,
யாழ்ப்பாணம்.

அன்னாரின் கணவர்:
மு. ஆறுமுகம்
(முன்னாள் மேலதிக அரசாங்க அதிபர், மன்னார்.)

(42906)


## ஆசிரியர் சம்பளம் அதிகரிப்பில்லை

தென்மராட்சி கல்விக் கோட்டத்தினால் கடந்த வருடம் ஆரம்பத்தில் ஆசிரிய சேவையில் உள்ளீர்க்கப் பட்ட பல ஆசிரியர்களுக்கு 1995 ஆம், 1996 ஆம் ஆண்டுகளுக்கொன சம்பள உயர்வு வழங்கப்படவில்லை எனவும் —

ஒரு சிலருக்கு கடந்த ஆண்டு சம்பள உயர்ச்சி வழங்கப்பட்ட போதிலும் சம்பள நிலுவை வழங்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-117)

## வேதாந்தப் பேருரைகள்

சின்மய இயக்கத்தின் புதிய பீடாதிபதியான சுவாமி தேஜோமயானந்தா கொழும்பு வந்துள்ளார்.

சுவாமி சின்மயானந்தா இறைபதம் அடைந்த பின்னர் அவரின் இடத்துக்கு 43 வயதான சுவாமி தேஜோமயானந்தா நியமிக்கப்பட்டுள்ளார்.

தமது இருபதாவது வயதில் பௌதிகவியல் பட்டப் படிப்பு மாணவனாக இருந்த வேளை சுவாமி சின்மயானந்தா நிறுவிய வேதாந்தக் கல்விக் கழகத்தில் சேர்ந்து அவரின் சீடராக இருந்து சேவை புரிந்தவர் சுவாமி தேஜோமயானந்தா.

சுவாமிகள் இம்மாதம் 6ஆம் திகதி தொடக்கம் 10ஆம் திகதி வரை பம்பலப்பிட்டி கதிரேசன் மண்டபத்தில் வேதாந்தப் பேருரைகள் நிகழ்த்துவார். (அ)


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான விண்ணப்பங்கள் 1996 - 10 - 25 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

1. தரவுப்பதிவு இயக்குநர் தரம் 11
வகுப்பு 'ஆ'
சம்பளத்திட்டம்-
ரூபா 2745 - 10x 55 - 7 x 65 - 3, 750/-
மாதமொன்றுக்கு.

2. தரவுப்பதிவு இயக்குநர் தரம் 11
வகுப்பு 'ஆ'
(ஒப்பந்த அடிப்படை)
சம்பளம்-ரூபா 4, 355/-
(நிலையானது)
மாதமொன்றுக்கு.

தகைமைகள்:

க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாமல் ஆறு பாடங்களில் சித்தியடைந்து அவற்றில் ஐந்து திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

குறிப்பு-
தரவுப்பதிவு இயக்குனராகப் பணியாற்றி அனுபவம் பெற்றோருக்கு முன்னுரிமை அளிக்கப் படும்.
வயது - 45 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்துக்கும் ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்திய பின்னர் இப்பல்கலைக் கழக தாபனக் கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் அலுவலகத்தில் பெறக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும். விண்ணப்பப் படிவத்திற்கான கட்டணத்தை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கி நவீன சந்தைக்கிளையிலும் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் விண்ணப்பப்படிவத்தையும் விவரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரின் பெயரில் பெறப்பட்ட 20 ரூபா பெறுமதியான காசுக் கட்டளை/தபாற் கட்டளையுடன் 23x 10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்ட 2 ரூபா முத்திரையொட்டப் பட்ட கடித உறையையும் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பட்ட படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள் ஆகியவற்றில் பணியாற்றும் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். வயதுக்கட்டுப் பாட்டெல்லை சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்குப் பொருந்தாது.

விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்களும் தெளிவான விவரங்கள் தரப்படாத விண்ணப்பங்களும் நிராகரிக்கப் படும்.

— பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1996 - 09 - 24

(C/3220)



# 31-ம் நாள் நினைவஞ்சலி

04-10-1996



உதயம்: 16 — 01 — 1930

அஸ்தமனம்: 04 — 09 — 1996

## அமரர் வீரபாகு யோகராஜா

(இளைப்பாறிய புகையிரதத்திணைக்கள ஊழியர்)

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (04-10-96) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

52, மலர்மகள் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

(42994)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

சுன்னாகம், சூராவத்தை அம்மன் கோவிலுக்கு அண்மையில் எனக்குச் சொந்தமான சிறிய வீடு, வளவு, கிணறு, -4½ பரப்பு விற்பனைக்குண்டு. நியாயமான விலைக்கு விற்கப்படும். தொடர்பு:- சுவாமி சித்ரூபானந்தா, ஸ்ரீ சாரதா சேவாச்சிரமம், பருத்தித்துறை. (C/3217)

லுமாலா ஆண்கள் சைக்கிள் ரூ 2500/- JAP 4F என்ஜின் ரூ 3000/- விற்பனைக்குண்டு பிற்பகல் 2 00 மணி- 5 00 மணி ஸ்கந்தராசா, கனகரத்தினம் வீதி, வட்டுக்கோட்டை. (42977)

எம்மிடம் பின்வரு கால்நடை மருந்து வகைகள் நியாயமான விலைக்குப் பெற்றுக் கொள்ளலாம். ரிலொக்ஸ், தயாகல், பிக்குற்றின். தேவையானவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். பொதுமுகாமையாளர் யாழ் மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து) கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/3223)

## கணிதம் / ஆங்கிலம்

O/L இல் Distinction Credit பெறுபேறடைய (ஆண்டு 9, 10 உட்பட) 15 வருடங்கள் விடைத்தாள்கள் திருத்திய ஆசிரியரால் கற்பிக்கப்படும். இல: 85, சிவன் கோவிலடி, சிவன் கோவில் மேற்கு வீதி, திருநெல்வேலி. (42979)

## மணமகன் தேவை

இந்து, உயர்குல, அழகிய, படித்த 29 வயதுடைய பெண்ணுக்கு பெற்றோர் பொருத்தமான மணமகனைத் தேடுகின்றனர். நட்சத்திரம் மூலம். 8 இல் செவ்வாய். தொடர்பு: மே/பா இல. 536, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (42982)

## தகவல்களை வெளியிட தடை!

கொழும்பு, ஒக். 4

நீர்கொழும்பு பகுதியில் அண்மையில் இடம்பெற்ற ஐ. தே. கட்சிக்கு எதிரான வன்முறைகள், படுகொலைகள் தொடர்பாக பொலிசாரால் மேற்கொள்ளப்பட்டு வரும் விசாரணைகள் பற்றிய தகவல்களை பத்திரிகைகளுக்கு வெளியிட வேண்டாம்- இவ்வாறு குற்றத்தடுப்புப் பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் பி.ஈ சுமணசேகரா நீர்கொழும்பு பொலிஸ் அத்தியட்சகருக்குப் பணிப்புரை வழங்கியிருக்கிறார்.

சிங்களப் பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டிருக்கிறது. (உ-10)


**A|L 96 DAY CLASSES**

ஆரம்பம்:

**09–10 96**

9 மணி

விவரங்களுக்கு:

S அருள்நங்கை

**புதிய உயர் கல்லூரி**

ஆரியகுளம்சந்தி, யாழ்.

பிறைறவே இன்ஸ்ரிரியூட்

மூத்த விநாயகர் கோவிலடி, ஆனைக்கோட்டை.

(இரு நிறுவனங்களிலும் நடைபெறும்.)

(42929)


# அருள்மிகு ஸ்ரீ இலஞ்சியாரணியம்

மண்டுவில் அம்மன் ஆலயம்

(சோலை அம்மன்)

சாவகச்சேரி

## ஏகதின இலட்சார்ச்சனையும் விஷேட திரவ்யஹோமமும்

காலம்:- **07–10–96** திங்கட்கிழமை காலை **6 30** மணிக்கு அம்பாளுக்கு **108** சங்காபிஷேகம் தொடர்ந்து இலட்சார்ச்சனையும், விஷேட திரவ்விய ஹோமமும் நடைபெற்று மாலை உற்சவமும் நடைபெற அன்னையின் திருவருள் கூடியுள்ளது.

சிவஸ்ரீ- க. கிருபானந்தக் குருக்கள்

பிரதம குரு.

(42992)

# சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்

(வரையுள்ளது)

## வெற்றுச்சாக்கு, பரல், பை விற்பனை

எமது சங்கத்தில் கீழ்வரும் விபரப்படியான வெற்றுச் சாக்கு, வெற்றுப் பரல், வெற்றுப் பை என்பன கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குள்ளன. இவற்றினைப் பெற விரும்புவோர் மீளப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 500/— செலுத்தி 16 - 10 - 96 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன் 'பொது முகாமையாளர், ப. நோ. கூ சங்கம், சாவகச்சேரி' என்ற முகவரிக்கு அனுப்பி உறுதிப்படுத்தவும்.

இனம்

1. மாவுச் சாக்கு
2. சீனிச் சாக்கு
3. 1). அரிசிச் சாக்கு தரம் 1
   11). அரிசிச் சாக்கு தரம் 11
4. 1). மாவு பை
   11) சீனி பை
5. ஏனையவை
6. கழிவுச் சாக்கு
7. வெற்று றம்

பொது முகாமையாளர்

சாவகச்சேரி, ப நோ. கூ. சங்கம்

சாவகச்சேரி (சி/3222)

# நீங்காத நினைவில் 31- ஆம் நாள்

## திருமதி இரா. சிவகாமிப்பிள்ளை

எங்கள் குடும்பக் குலவிளக்காய் எல்லோருக்கும் "சீனியம்மா" வான திருமதி இரா. சிவகாமிப்பிள்ளை 1996-09-06 அன்று தனது 91-ம் வயதில் வானுலகெய்தி அங்கு தன்னுயிர்த் துணைவருடன் இணைந்து இறைவன் பாதாரவிந்தத்தில் கலந்து கொண்டுள்ளார்.

அன்னார் அமரர் உயர்திரு குட்டிப்பிள்ளை அப்பாத்துரை முதலாளியாரின் மூத்த மருமகளும், அமரர் உயர்திரு இராமநாதபிள்ளை அவர்களின் பாசமிகு துணைவியும், சத்துருசங்காரவேல் (இளைப்பாறிய அரச. நில அளவையாளர்), குழந்தைவடிவேல் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், தவமணி, பாக்கியலெட்சுமி ஆகியோரின் அன்பு மாமியும், மணிவண்ணன் (Chief Mate, "Nord" Lines), விக்னேஸ்வரன் (Civil Engineer, Trinco), மணிசேகரன் (U. K), ஜானகி, கோதை, நளாயினி, குமரதாசன் (சுவிஸ்), கதிர்ச்செல்வன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

காலத்தின் கோலத்தால் அன்னாரின் மரண அறிவித்தலை உரிய நேரத்தில் அறிவிக்கமுடியாது போனதற்கு மனம் வருந்துகின்றோம்.

மரணச் செய்தி கேட்டு ஓடோடிவந்து வேண்டிய உதவிகளைச் சொரிந்த கனிந்த இதயங்களுக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் எம் உளம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

1996 - 10 - 06 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளில் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்மா சாந்திபெறப் பிரார்த்தித்து கிரியையை சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

ஓம் சாந்தி!

இரா. சத்துருசங்காரவேல்

குடும்பம்.

குச்சம் வீதி,

வல்வெட்டித்துறை. (42949)

# 10 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வல்வைப் பெரியார்

**வ. வ. இராமசாமிப்பிள்ளை**

மண்ணில்: 11 - 03 - 1898

விண்ணில்: 25 - 05 - 1986

# 20 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**இராமசாமிப்பிள்ளை இராசம்மா**

பிறப்பு: 20 - 03 - 1904

இறப்பு: 23 - 05 -1976

திதி:- 04 - 10 - 1996

50 வருடம் வல்வை முத்துமாரி அம்மன் தலைவராகவும், பல பாய்க் கப்பல்கள் வைத்திருந்து கப்பலோட்டிய தமிழனாகவும், R V. G ஸ்தாபனத்தின் ஸ்தாபகராகவும் இருந்து சைவத்துக்கும், தமிழுக்கும் தொண்டாற்றியவருமாவார்.

அனைவரையும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நெல்லியடி, வல்வெட்டித்துறை.

(42953)

வ. இ. நடனசிகாமணி, சக சகோதரர்கள், குடும்பத்தினர், உற்றார், உறவினர்கள்.

யாழ்ப்பாணம் நல்லூர் சிவநூலகம்.

உதயன்

## முற்தேவைகள் மூன்று

வடபகுதியை மீண்டும் கட்டி எழுப்பும் நடவடிக்கைகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை உதவும் என்று சபையின் செயலாளர் நாயகம் பூட்ரஸ் பூட்ரஸ் காலி வாக்குறுதி அளித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை —

யாழ்ப்பாணக் குடாநாட்டின் புனர்வாழ்வு, புனரமைப்புப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு பாதுகாப்பு அமைச்சில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டில் வைத்து அமைச்சர் ரத்வத்த உத்தரவிட்டிருக்கிறார்.

யாழ்ப்பாணக் குடாநாடு உட்பட வடபகுதி முழுவதும் கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக நடைபெற்று வரும் போரினால் அழிந்து போயுள்ளது உலகமே அறிந்த ஒன்று.

இலங்கையின் ஏனைய பகுதிகள் பல வழிகளாலும் பல துறைகளிலும் அபிவிருத்தி செய்யப்பட, முன்னேற்றப்பட —

வடக்கு- கிழக்குப் பிரதேசங்கள் மட்டும் இருந்ததை விட சீரழிக்கப்பட்டுப் பின்தள்ளப்பட்டு வருகின்றன.

போருக்கு முன்னரே அபிவிருத்தியில் புறக்கணிக்கப்பட்டு வந்த இப்பகுதிகள், போரின் போது ஏற்கனவே கண்ட வளர்ச்சியும் சீரழிக்கப்பட்டு நாசம் செய்யப்பட்டு விட்டன.

இப்போதுள்ள நிதி நிலையில் இப்பகுதிகளை அரசு தனித்து அபிவிருத்தி செய்வது என்பதனை நினைத்துப் பார்க்க முடியாது. ஐ. நா. போன்ற சர்வதேச அமைப்புகளினதும் வெளிநாடுகளினதும் உதவியே முழுக்க முழுக்கத் தேவை.

எப்படியோ, வடக்கு புனரமைக்கப்பட வேண்டும். இங்கு வாழும் மக்களுக்குப் புனர்வாழ்வு தரப்பட வேண்டும். இதில் இரண்டு கருத்துக்களுக்கு இடமிருக்க முடியாது.

ஆனால் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வராமல், சமாதானமும் அமைதியும் இனிமேல் நிரந்தரம் என்ற நிலை எய்தப்படாமல் —

மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பாத வரை —

புனர்நிர்மாணம்புனர்வாழ்வு குறித்துப் பேசுவதும் எழுதுவதும் எல்லாம் நீர் மேல் எழுத்துக்களே. இவை இரண்டுக்கும் போர் ஒழிப்பும் அமைதியும் சமாதானமும் முற்தேவைகள்.

அவற்றை எய்துவதற்கு முன்னர் ஆரம்ப புனர்வாழ்வு நடவடிக்கைகள் தானும் ஒப்பேற மாட்டா என்பதற்கு யாழ்ப்பாணம் நல்லதோர் உதாரணம்.

தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளுக்கு இடம் பெயர்ந்திருந்த வலிகாமம் மக்கள் திரும்பி வந்து, ஆறு மாதங்களாகின்றன. அவர்களது நாளாந்த வாழ்க்கையே இன்னும் சீராகவில்லை. மக்களில் பலரும் இன்னும் தமது சொந்த வீடுகளில் மீளக் குடியமர்ந்து வாழ முடியவில்லை. குடாநாட்டுக்குள்ளேயே உள்ள தமது உறவினர்களைச் சந்திக்க முடியவில்லை.

வீதிகள் திருத்தப்படவில்லை; விவசாயத் தேவைகள் சரிவரக் கிடைப்பதில்லை; தொடர்பு வசதிகள் மற்றும் உட்கட்டுமானத் துறைகள் சரிவர இயங்கவில்லை. கொழும்பிலிருந்து தேவையான பொருள்களைக் கொண்டு வருவதில் தாமதம், தடங்கல் உண்டு.

இப்படியிருக்க, புனர்வாழ்வு புனரமைப்புத் திட்டங்கள் குறித்துப் பேசியும் உத்தரவிட்டும் என்ன தான் நடக்கப் போகிறது..?

# தமிழ் கட்சிகளை அழைத்து ஆஸித் தூதுவர் பேச்சு

கொழும்பு, ஒக். 4

ஆஸ்திரேலியாத் தூதுவர் கொழும்பிலுள்ள தமிழ் அரசியல் கட்சித் தலைவர்களை அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தி உள்ளார்.

கொழும்பிலுள்ள ஆஸ்திரேலியத்தூதரகத்தில் இடம் பெற்ற இந்தச் சந்திப்பில் 5 தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொண்டனர்.

அரசாங்கத்தின் அரசியல் தீர்வுப் பொதி, இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் ஆகியவை தொடர்பாக தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாட்டை ஆஸ்திரேலியத் தூதுவர் கேட்டறிந்து கொண்டதாகத் தமிழ்க் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தமிழ்க் கட்சிகளை அமெரிக்கத் தூதுவரும் அழைத்து ஏற்கனவே பேச்சு நடத்தி இருந்தது தெரிந்ததே.

(இ-3)

## யாழ். செல்ல காத்திருக்கும் பயணிகள்

கொழும்பு, ஒக். 4

யாழ். நகர் செல்வதற்காக வவுனியாவிலும், திருமலையிலும் சுமார் ஆயிரத்து 400 பயணிகள் காத்திருக்கின்றனர் என்றும்—

திருமலையில் இருந்து யாழ். செல்ல சுமார் 700 பயணிகள் உள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## மெதடிஸ்த திருச்சபை 175 ஆம் ஆண்டு விழா

வடமராட்சி, ஒக். 4

கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையின் 175 ஆவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

இன்று காலை 9-00 மணிக்கு ஆலய வழிபாடு, ஆலயக் கொடி ஏற்றல் வைபவங்களுடன் விழா நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

இந்த விழாத் தொடர்பான நிகழ்வுகள் 8 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

5 ஆம் 6 ஆம் திகதிகளில் சிறு பிள்ளைகள், வாலிபர்கள் தோழமை வேளை நிகழ்வுகளும்—

6 ஆம் திகதி ஸ்தோத்திர வழிபாடு மற்றும் சிறப்பு மலர் வெளியீடும் —

7 ஆம் திகதி இடைக் குறிச்சி சிற்றாலய 25 ஆவது வருட நிறைவு வெற்றி விழாவும் —

8 ஆம் திகதி மந்திகை ஆதார வைத்தியசாலை மெதடிஸ்த சிற்றாலய முதலாம் வருட நிறைவு விழாவும் நடைபெறும்.

(இ-173)

## நெடுந்தீவில் பஸ் சேவை

நெடுந்தீவு ஒக். 4

கடந்த திங்கட்கிழமை முதல் நெடுந்தீவில் உள்ளூர் பஸ் போக்குவரத்துச் சேவை மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (இ-111)

## இரையைத் தேடும் போதே இறையையும் தேடுங்கள்

''நீ என்ன செய்யப் போகிறாய்?'' இது பொருள் பொதிந்த மிகவும் முக்கியமான கேள்வி. ஆழ்ந்து சிந்தித்து மறுமொழி சொல்ல வேண்டிய வினா.

ஆனால் சாதாரண மனிதன் ஒரு வித முன் யோசனையும் இன்றிச் சுலபமாக விடையளித்து விடுவான்.

''நான் கடைக்குப் போகிறேன். அலுவலகத்துக்குப் போகிறேன். வங்கிக்குப் பணம் போடப் போகிறேன். இரண்டு நாட்களாக நித்திரை இல்லை. நன்றாகக் குளித்து விட்டு நித்திரை கொள்ளப் போகிறேன்.'' — இப்படி ஏதாவது சொல்வான்.

ஓ! அப்படியா? சரி தான். நான் அதைக் கேட்கவில்லை அன்பனே, உன்னுடைய ஆன்ம லாபத்துக்காக என்ன செய்யப் போகிறாய்?

நீ மெய் (நிலையானது) என்று நம்பி இருக்கும் உன்னுடைய பொய்யை (உடலை) விட்டு உயிர் பிரிந்த பின்னர், அந்த ஆன்மா நற்கதி அடைய வேண்டாமா? அதைப் பற்றி எப்போதாவது சித்தித்தாயா? என்ன முயற்சி செய்கிறாய்? என்று தான் வினவினேன் என்றால்-

ஐயோ! எனக்கு நேரம் ஏது? எவ்வளவு வேலை இருக்கிறது. குளிக்க சாப்பிடக் கூட அவகாசம் இல்லை. இந்த நேரத்தில் ஆன்ம லாபத்தைப் பற்றி யோசிக்கவோ பேசவோ முடியாது. மோட்சத்தையும் நரகத்தையும் கண்டவர் யார்? வேலை எதுவும் இல்லாதவர்கள் அல்லவா அதைப் பற்றிக் கவலைப் பட்டுக் காலத்தைப் போக்க வேண்டும். என்னால் அதைப் பற்றி யோசித்துப் பொழுது போக்க முடியுமா? என்று அலட்சியப் படுத்துவார்கள்.

### ஞானக்கதிர்

இப்படி விடையளிக்கும் மனிதருடைய நிலை மிகவும் பரிதாபகரமானது. பொருள் தேடுவதிலும், தேடிய பொருளைப் பாதுகாப்பதிலும், உண்பதிலும், உறங்குவதிலும் மனைவி மக்களுடன் களிப்பதிலும் அவர்களுடைய வாழ்நாள் கழிந்து விடுகிறது.

செல்வம் சேர்ப்பதும், உண்பதும் உடுப்பதும், அலைவதும் உலைவதும், கவலைப் படுவதும் ஆகிய இவையெல்லாம் எப்பொழுதும் உள்ளவை. அதாவது பிறந்த நாள் முதல் மரண பரியந்தம் நடப்பவை. அனைவருக்கும் பொதுவான சங்கதிகள்.

அறிவு நிறைந்தோரும், ஆன்ம விசாரம் கொண்டோரும் இவற்றை விவேகம் குறைந்த செயல்கள் என்று எண்ணுவர். ஏனெனில் உடம்பு உள்ள மட்டும் பசி நீங்க மாட்டாது. பசி உள்ள வரைக்கும் உணவுக்கும் ஏனைய தேவைகளுக்கும் பொருள்தேடவேண்டும். இது எத்தனை பிறவிகள் எடுத்தாலும் செய்தாக வேண்டிய காரியம். ஜனனம்... மரணம் மறுபடியும் கருப்பையுள் சரணம்.

பிறவி ஒரு தீராத பிணி. இதை ''மந்திரமும் தந்திரமும் மருந்தும் ஆகித் தீர்க்க வல்லவன் இறைவனே'' என்பது அப்பர் அடிகள் வாக்கு. 'இரை' தேட ஓடித் திரியும் போதே, மறந்து விடாமல் 'இறை'யையும் தேட முயல வேண்டும் என்பது ஆன்றோர் கொள்கை.

இறை தேடும் பணிக்குப் பக்கபலமாக அமைந்து உதவக் கூடியவை மனம் ஒன்றிய வழிபாடு, தானம், தர்மம், தவம் ஆகியன. தானமும் தர்மமும் பொருள் வசதி உள்ளவர்கள் மட்டுமே செய்யக் கூடியவை. பொருள் வசதி இல்லாதவர்களுக்கு அருள் பெறும் வாய்ப்பு இல்லையா? உண்டு என்று உறுதியுடன் பேசுகிறார் பொய்யாமொழி. அது மனைவி மக்களுடன் வாழும் போதே வீட்டில் இருந்தே செய்யக் கூடியது.

''உற்ற நோய் நோன்றல் உயிர்க்கு உறுகண் செய்யாமை அற்றே தவத்திற்கு உரு''
(குறள்: 261)

(நோன்றல்: பொறுத்தல், உறுகண்: துன்பம்)

மனம் புலன் வழிச் செல்லாது தடுத்தற் பொருட்டு விரதம் முதலாய நியமங்களை மேற்கொண்டு, அதனால் வரும் பசி தாகம் தளர்ச்சி; முன் வினைப் பயனால், உயிருக்கும் உடலுக்கும் உண்டாகும் துன்பங்கள்; கோடைகால வெப்பம், மாரிகாலக் குளிர், நண்பர்களாலும் உறவினர்களாலும் இழைக்கப்படும் இடையூறுகள் ஆகியவற்றைப் பொறுமையுடன் தாங்கிக் கொள்ளுதல் —

இன்னொரு உயிர்க்குத் துன்பம் செய்யாதிருத்தல் — ஆகிய இரண்டு பண்புகளும் தவத்தின் வடிவங்களே என்று பேசியுள்ளார்.

பொருட் செலவு சிறிதும் இல்லாத இந்தத் தவத்தை ஆன்ம விசாரம் கொண்ட எவரும் மேற்கொண்டு மேலான இகபர வாழ்வைப் பெற முயலலாம்.

- முளாய் அருணாசலம்

### நாளை

புரட்டாதி 19
சனிக்கிழமை
திதி: அட்டமி
நட்சத்திரம்: புனர்பூசம் பின் இரவு 3-24 வரை.
ராகுகாலம்: 9-02—10-32
சுப நேரம்: 3-02 — 4-32
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## காரைநகருக்கு பொன்னாலைபாதை

காரைநகருக்கு மீண்டும் சென்று குடியேற விரும்புபவர்களை பொன்னாலையூடாகக் கூட்டிச்சென்று அப்பாதையை மீண்டும் திறந்துவிட நடவடிக்கை எடுத்துள்ளதாக மேலதிக அரசாங்க அதிபர் கூறியுள்ளார். அவர்கள் கூறியது நிறைவேறுமானால் எவ்வளவோ பிரச்சினைகள் தீர்ந்துவிடும். நிறைவுறுமா? பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும் காரைநகர் மக்கள் பலர் மீளக்குடியேற விருப்பம் தெரிவித்துள்ளனர். அவர்களது ஆசை நிறைவேறவேண்டும்.

இதற்கு முன்னர்—

காரைநகரில் உழவு இயந்திரம் இல்லை என்று கூறி தமக்கு வாடகைக்குப் பெற்றுத்தருமாறு காரைநகர் வாசிகள் அரச அதிகாரிகளிடம் கேட்டனர். அவர்கள் அதற்கு உடன்பட்டனர். ஆனால் இதுவரை அது நிறைவேறவில்லை.

விதை நெல் பெற்றுத் தருவதாக அரசாங்க உயர் அதிகாரிகள் கூறினர். இப்போது விதைக்காது விட்டால் போகம் போன பின்னரா விதை நெல் தருவார்கள்?

ஆறு வருட காலமாக தீவகப்பகுதியில் இவ்வதிகாரிகள் இருந்தார்கள். அங்கு தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சிலரும் வந்து போயினர். எவ்விதமான அபிவிருத்தி வேலைகளும் நடைபெறவில்லை. எல்லா இடங்களும் பாழ் அடைந்த நிலையில் உள்ளன.

அடிப்படை வசதிகள் எதுவும் அங்கு இல்லை; வீதிகள் போக்குவரத்திற்கு உதவா; நல்ல கட்டிடங்கள் இல்லை; குடிநீர் வசதியில்லை

இந் நிலையில் அரசாங்க அதிகாரிகள் கூறியது எதுவும் இதுவரையில் நடைபெறவில்லை. தயவு செய்து சம்பந்தப்பட்டவர்கள் இதில் அதிக அக்கறை எடுப்பார்களா?

காரைநகர் வட.கிழக்கு, க. தியாகராசா

## வாசகர் திருமுகம்

## உணவு முத்திரை 33 A

இராணுவ நடவடிக்கை காரணமாக வலிகாமத்தில் இருந்து தென்மராட்சி சென்றிருந்த போது அங்கு இடம் பெயர்ந்த நிவாரண முத்திரை மக்களுக்கு வழங்கப்பட்டன. அங்கு சுன்னாகம் ப. நோ. கூ. சங்கக்கிளையில் பொருள்களைப் பெற்றுவந்தோம். மீண்டும் வலிகாமம் வந்து அதே கூட்டுறவுச் சங்கக்கிளையில் 32 B புள்ளிக்கு பொருள்கள்பெற்றோம். அதன் பின்பு உடுவில் இணுவில், தாவடியைச் சேர்ந்த 30 சத வீதத்தினருக்கு 33 A புள்ளிக்கு பொருள்கள் வழங்கப்பட்டன. மிகுதி 70 சத வீதமான ஆயிரம் குடும்பங்களுக்கு வழங்கப்படாமல் 33 B புள்ளிக்கு பொருள்களை வழங்கினார்கள்.

நாம் கிளை முகாமையாளரிடம் 33A புள்ளிக்குப் பொருள்கள் தரப்படவில்லை என வினவியபோது பின்பு வழங்கப்படும் எனக் கூறினார். அதன் பின்பு 33 A புள்ளி எடுக்காதவர்களைப் பதிவு செய்தார்கள். நாமும் பதிந்து முத்திரைப் பொருள்கள் வரும் என ஆவலுடன் இருந்தோம்.

இதன் பிற்பாடு மூன்று மாத புள்ளிகளுக்கு (34 A B. 35 A. B, 36 A. B) பொருள்கள் வழங்கப்பட்டுவிட்டன. இன்னும் எவ்வளவு காலம் தான் 33 A புள்ளிக்குரிய பொருள்களுக்குக் கூட்டுறவுக் கடையில் சங்கடப்பட்டுத் தூங்கப்போகிறோமோ தெரியவில்லை.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வெகு விரைவில் நடவடிக்கை எடுக்கக் கோருகிறேன்.

சா. சோமசபேசக் குருக்கள்

இணுவில், சுன்னாகம்.

★ உணவு முத்திரை 33 A புள்ளிக்குரிய நிவாரணப் பொருள்களுக்கு தாமும் தமது பகுதியைச் சேர்ந்த மக்கள் பலரும் கடந்த நான்கு மாதங்களாக அலைவதாக —

சுன்னாகம், உடுவில் கிழக்கைச் சேர்ந்த சி. சுரஞ்சன் என்ற வாசக நேயரும் எழுதியுள்ளார்.

## மாணவ குடும்ப நல சுகாதார சேவை பரீட்சை

மாணவ குடும்ப நல சுகாதார சேவை உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 27ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் யாழ்ப்பாணம் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிமனையில் தொடர்பு கொண்டு பெயர் விவரத்தைப் பார்வையிடலாம் என்றும்—

அனுமதி அட்டைகள் பணிமனைக்கு வந்து சேர்ந்ததும் பரீட்சார்த்திகளுக்கு அறிவிக்கப்படும் என்றும்— பரீட்சார்த்திகள் புதிய விலாசங்களுக்கு மாறியிருந்தால் அவ்விலாசத்தை பணிமனைக்கு தெரியப்படுத்தும்படியும்—கேட்கப்பட்டுள்ளது.

மேலும் இதற்கான பரீட்சை யாழ்ப்பாணம் தாதியர் பயிற்சிப் பாடசாலையிலேயே நடைபெறும். (இ-15)

## யாழ்ப்பாணத்தில் மீளக்குடியேறிய குடும்பம் ஒன்றுக்கு ரூ. 7 ஆயிரம்

### மீள் குடியேற்ற அதிகாரசபைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 4

யாழ். மாவட்டத்தில் மீளக்குடியேறியோருக்கு குடும்பம் ஒன்றுக்கு 7 ஆயிரம் ரூபா கொடுப்பனவு வழங்கப்பட உள்ளது. முதற்கட்டமாக வலி- வடக்கு, சங்கானை பிரதேச செயலகப் பகுதியில் மீளக்குடியேறிய குடும்பங்களுக்கே இக்கொடுப்பனவு வழங்கப்படும்.

வடக்கு மீள் குடியேற்ற அதிகார சபைத்தலைவர் சோமபால குணதீர இதனை உதயனுக்குத் தெரிவித்தார்.

ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் மீளக்குடியேறியவர்கள் குறித்து மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் —

தற்போது வலி. வடக்கு, சங்கானை பிரதேச செயலர் பிரிவில் மதிப்பீடு முடிவடைந்ததால் உடன் இக்கொடுப்பனவை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் — அவர் கூறினார்.

தொடர்ந்து ஏனைய பகுதிகளில் மதிப்பீடுகள் முடிய முடிய இக்கொடுப்பனவு வழங்கப்படும் என்றும் — அவர் தெரிவித்தார். (இ-3)

## குற்றவாளிக் கூண்டில் ..

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரொலிக்கத் தொடங்கியுள்ளது.

### பர்மாவில்

பர்மாவில் கடந்த 8 வருடங்களாக சட்டமும் ஒழுங்கும் என்ற போர்வையில் சித்திரவதைகள், காரணமின்றிக் கைது செய்தல், காலவரையறையற்ற சிறை, வீட்டுக் காவல்கள் ஆகிய சட்டவிரோதச் செயல்களில் அங்குள்ள இராணுவ அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

எதிர்க்கட்சித் தலைவி ஆகாசூகியின் தொலைபேசி துண்டிக்கப்பட்டுள்ளது. அவர் தொடர்ந்து வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ளார். கடந்த 8 ஆண்டுகளாக இராணுவத்தின் தொல்லைகளுக்கு உட்பட்டுள்ள எதிர்க்கட்சித் தலைவி ஆகாசூகியை பர்மிய மக்கள் தமது 'இரட்சகி'' எனக் கருதுகின்றனர். இங்கு ஆட்சி மாற்றம் எந்த நேரத்திலும் நிகழலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

### கிழக்கு திமோர் படுகொலைகள்

இந்தோனேஷியாவில் தற்போதைய ஜனாதிபதி சுஹாட்டோவின் பதவிக் காலத்தில் கிழக்கு திமோரில் அவரது இராணுவம் கொலைகளை நடத்தி வருகிறது.

தாய்லாந்தில் 63 ஆண்டுகளாக நடந்துவரும் முடியாட்சியில் 19 இராணுவப் புரட்சிச்சதிகளை இராணுவ அதிகாரிகள் நடத்தியுள்ளனர். அவற்றுள் 10 புரட்சிச் சதிகள் மாத்திரமே வெற்றி பெற்றுள்ளன. 1992 இல் பாங்கொக் நகரில் ஜனநாயகக் கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் 50 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.

மேற் குறிப்பிட்ட அத்துமீறல்களையும் வேறு நாடுகளில் இடம்பெற்று வரும் அத்துமீறல்களையும் அந்தந்த நாட்டு மக்கள் நினைவில் வைத்திருக்கின்றனர்.

''காலம் வரும். அப்போது இந்த அத்துமீறல்களில் ஈடுபட்ட தலைவர்களை கவனிப்போம்'' என்ற எண்ணம் மக்கள் மனதில் தோன்றி அது ஆவேசமாக உருமாறும் போது சன்டுவானுக்கு ஏற்பட்ட கதியே அவர்களுக்கும் நேரலாம்.

தென்கொரியா அதற்குமுன் மாதிரியாக அமைந்துள்ளது. (இ-10)

## தீர்வு முயற்சிக்கு வரும் தடைகளை கண்டு அரசு பின்வாங்கமாட்டாது

### அமெரிக்காவில் அமைச்சர் கதிர்காமர்

கொழும்பு, ஒக். 4

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதற்கான நடவடிக்கைகளில் இலங்கை முனைப்புடன் ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சிகளில் ஏற்படும் தடைகளைக் கண்டு நாம் பின்வாங்கப் போவதில்லை

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அமெரிக்காவில் பேசுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

நியூயோர்க்கில் நடைபெறும் ஐ நா. பொதுச்சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொள்ளும் இலங்கைத் தூதுக் குழுவுக்கு தலைமை வகித்துச் சென்றுள்ள அமைச்சர் கதிர்காமர்—

அங்கு ஐ. நாவுக்கான இலங்கைத் தூதரகம், நியூயோர்க் தெற்காசிய பத்திரிகையாளர் சங்கம், கொலம்பிய பல்கலைக் கழகத்தின் தெற்காசிய நிறுவனம் ஆகியன இணைந்து ஒழுங்கு செய்துள்ள கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:-

இலங்கை அரசாங்கம் பேச்சுவார்த்தைக்கான கதவுகளை மூடிவிடவில்லை. ஆனால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளைப் புலிகள் ஏற்றுக்கொண்டால் இது தொடர்பாக பரிசீலிக்கப்படும்.

அவர்கள் மனப்பூர்வமாக ஈடுபாட்டுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதற்கு நாட்டம் கொண்டுள்ளார்களா என்பது தொடர்பானவையே இந்த நிபந்தனைகள் ஆகும்.

அதாவது, இணங்கிக் கொள்ளப்பட்ட குறித்த கால எல்லைக்குள் அவை இடம் பெற வேண்டும்.

ஆனால் விடுதலைப் புலிகள் எத்தகைய தந்திரோபாயங்களை கையாண்டாலும் நாடு துண்டாடப்படுவதற்கு அரசு ஒரு போதுமே அனுமதிக்காது என்றார். (அ-3)

## ஊழியர் வரவு நெருக்கடி:

## இலங்கை வங்கி கிளைகளில் வழமையான பணி பாதிப்பு

இலங்கை வங்கியின் யாழ். நகரப் பகுதியில் இயங்கும் கிளைகளில் பணியாற்றும் ஊழியர்கள் வேலைக்கு சமுகம் தருவதில் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் காரணமாகச் சம்பந்தப்பட்ட இலங்கை வங்கிக் கிளைகளின் பணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன எனவும் வங்கியின் வாடிக்கையாளர்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்கமுடியாமலும் இருக்கின்றது எனவும் —

இலங்கை வங்கி அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

இலங்கை வங்கியில் பணியாற்றும் ஊழியர்களில் 75 வீதமானவர்கள் தட்டாதெரு தடைமுகாமைத்தாண்டி நகருக்குள் வரவேண்டியுள்ளதாகவும் —

இதனால் தினமும் மிகவும் தாமதமாகவே அவர்கள் வேலைக்கு சமுகமளிப்பதாகவும் —

மாதத்தில் மூன்றில் ஒரு நாள்கள் அவர்கள் வேலைக்கு சமுகமளிக்காது போவதாகவும் —

இதனால் வங்கிப் பணிகள் பெருமளவில் பாதிக்கப்படுவதாகவும் —

அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அதே நேரம் —

கொழும்பில் தங்கியுள்ள — இடம் பெயர்ந்த — இலங்கை வங்கி யாழ் கிளைகளின் ஊழியர்கள் இங்கு வருவதற்கு போக்குவரத்து வசதியில்லாது இருப்பதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இக்காரணங்களால் வங்கி வேலைகள் பெரிதும் பாதிக்கப்படுவதுடன், வாடிக்கையாளர்களுக்கு திருப்திகரமான சேவையை வழங்க முடியாதுள்ளதாகவும் அவர் கூறினார். (உ-3)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை காங்கேயன்

(எழுதுவினைஞர், பிரதேச செயலகம், வட்டுக்கோட்டை)

நல்லூர், பருத்தித்துறை வீதி, சட்டநாதர் கோயிலடியைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்லத்துரை காங்கேயன் நேற்று (3-10-96) வியாழக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்ற பொன்னையா செல்லத்துரை - பாக்கியம் தம்பதிகளின் சிரேஷ்ட மகனும், விஜயதேவி, (பொட்ஸ்வானா), லலிதாதேவி (லண்டன்), விஜயராணி, நிற்கந்தா [இலங்கை செஞ்சிலுவைச் சங்கம், யாழ் கிளை] ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசிங்கம் [பொட்ஸ்வானா), தர்மலிங்கம் [லண்டன்] ஆகியோரின் மைத்துனரும், விஜயபாலா [கனடா], தேவபாலா (லண்டன்), ஜெயபாலா [லண்டன்], உமா [லண்டன்], உஷா [லண்டன்] ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [4-10-96] வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பகல் 11 மணியளவில் திருநெல்வேலி செம்பாடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நிற்கந்தா
(சகோதரன்)

இல. 942, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(43003)

### திருமதி நாகம்மா ஆறுமுகம்

பன்னாலையைப் பிறப்பிடமாகவும், துர்க்காபுரம் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நாகம்மா ஆறுமுகம் 02 - 10 - 96 புதன்கிழமையன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிள்ளையினார் ஆறுமுகத்தின் அன்பு மனைவியும், மகேஸ்வரன், சோமதேவி, கௌரிதேவி ஆகியோரின் அன்புத் தாயாரும், முரளீதரன், வித்யாதரன், பிரசாந்த், கோபிநாத், பிந்துஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், திவ்யா, பிரதீப் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 03 - 10 - 96 இல் உடுவிலில் நடைபெற்றன. உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
வை. குணாளன்
(மருமகன்)

'மஞ்சுளா'
தேவாலய வீதி,
உடுவில்.

(43001)

## சமய நிகழ்ச்சிகளில்

யாழ்ப்பாணம், ஒக். 4

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை முன்னர் வெள்ளிக்கிழமை தோறும் நடத்தி வந்த வாராந்த சமய நிகழ்ச்சிகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

அந்த வகையில் இன்று மு. ப 10-30 மணிக்கு, ஞான பண்டித இயலரசு க. முத்துவேலு ''உதித்தனன் உலகம் உய்ய'' என்னும் பொருளில் சமயச் சொற்பொழிவாற்றுவார். (அ)

## துப்பாக்கி சூட்டில் மரணமான இளைஞன்

யாழ்ப்பாணம், ஒக். 4

துப்பாக்கிச் சூட்டினால் மரணமானதாக இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

வரணி இயற்றாலையில் நேற்று முன் தினம் காலை இடம் பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த செல்லத்துரை சிவநேசன் (வயது 27) என்ற இளைஞனே உயிரிழந்தவராவார்,

மரண விசாரணையின் பின் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (இ-15-117)

## நால்வர் கடத்தப்பட்டு கொலை

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வந்தாறுமூலையில் இனம் தெரியாத இருவரால் நான்கு குடிமக்கள் கடத்திச் செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-3)

## பொன்னாலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இன்னும் ஓரிரு நாள்களில் அங்கு அழைத்துச் செல்ல ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும் —

அங்கு அவர்கள் குடிதண்ணீர், மின்சாரம் மற்றும் வசதிகளைப் பெறவும் —

அவர்கள் தமது வீடு வளவுகளைத் துப்புரவு செய்ய நிதி வழங்கவும் — ஏற்பாடுகள் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-3)


## பெற்றோர்களே! தடுங்கள்!

போலியோ கொடுமையை உங்கள் பிள்ளைகள் அனுபவிக்க வேண்டாம்.

மீண்டும் ஐந்து வயதுக்குக் குறைந்தவர்களுக்குச் சொட்டு மருந்து.

இம்மாதம் 12 ஆம் திகதியை நினைவில் வைத்திருங்கள்.

கடந்த மாதம் சொட்டுமருந்து குடித்த, குடிக்காத பிள்ளைகள் அனைவரும் பருகலாம்.

PolioPlus



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 04-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.